UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Ordinary Level

**TAMIL** **3206/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2007**

**1 hour 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

*2820372496*

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

This document consists of **4** printed pages and **4** blank pages.

SP (SM/TL) T36812/3
© UCLES 2007

UNIVERSITY *of* CAMBRIDGE International Examinations

**[Turn over**

www.theallpapers.com

**BLANK PAGE**



www.theallpapers.com

## Section A – Translation

**1** Translate into **English**.

ஒரு இள வயதான பெண் பூங்காவில் உட்கார்ந்து கொண்டு அவளுடைய புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். இரண்டு சிறிய பிள்ளைகள் பந்துடன் மரத்தின் அடியில் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

கொஞ்ச தூரத்தில் இவர்களுடைய அம்மாக்கள் இருவரும் சுறுசுறுப்பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். படித்துக் கொண்டிருக்கும் போது, அவளுக்கு யாரோ அழும் குரல் கேட்டது. ஒரு பெரிய நாய் திடீரென்று குழந்தைகள் பக்கத்தில் வந்தது. அந்த நாய் குழந்தைகளைச் சுற்றி ஓடி வந்து பந்தை துரத்திக் கொண்டு ஓடியது. குழந்தைகள் மிகவும் பயந்து அழ ஆரம்பித்து விட்டனர். குழந்தைகளின் தாயார்கள் மிகவும் தள்ளி இருந்த படியால் அவர்களுக்கு அழுகைக் குரல் கேட்கவில்லை.

அதனால் இந்த இளம்பெண் உடனே எழுந்து குழந்தைகளை நோக்கி ஓடினாள். ஒரு பிள்ளையை மெதுவாகத் தூக்கிக் கொண்டு மற்ற பிள்ளையின் கையைப் பிடித்துக் கொண்டு, அவர்கள் அம்மாக்கள் இருக்குமிடம் நோக்கி நடந்தாள்.

[10]

**2** Translate into **Tamil**.

We set off early on the first morning of our vacation and headed towards the beach. It was bright and clear and the fishermen were already on the sand taking fish out of the nets and packing them into boxes.

An old man was taking his dog for a walk and said “hello” to us as he passed.

We could see a few small boats out at sea. Birds circled above us in the blue skies, but apart from their noise it was quiet around us.

It was still only five-thirty and the local people would not set out for at least another two hours.

Most people worked close to their homes and the majority were involved in the tourist industry. This meant that they were busier during the two main holiday seasons than the rest of the year.

We had come in the low season, so we were lucky to have the beach and the streets to ourselves for some time yet. It was a very different way of life from the hustle and bustle of the large city.

[20]

© UCLES 2007



www.theallpapers.com

## Section B – Comprehension

Do not translate the passage below. First, read it carefully and then answer, briefly and in **Tamil**, the questions that follow.

சமீப காலத்தில் கிரிக்கெட் விளையாட்டில் அதிக விக்கெட்டுகள் எடுத்து உலகத்திலேயே முதல் இடத்தைப் பிடித்திருக்கிறார் முத்தையா முரளீதரன். இது வரை மேற்கு இந்திய நாட்டில் உள்ள கோர்டினி வால்ஷ் என்பவர்தான் 519 விக்கெட்டுகள் எடுத்து முதலிடத்தில் இருந்தார். இவரைவிட அதிகமாக எடுத்து முதலிடத்தைப் பிடித்து இருக்கிறார் முத்தையா முரளீதரன். ஸ்ரீலங்கா சிம்பாபுவேயில் ஹராரே என்ற இடத்தில் கிரிக்கெட் டெஸ்ட் விளையாடும் போது பழைய சாதனை முரளீதரனால் முறியடிக்கப்பட்டது. இந்த வெற்றி கிரிக்கெட் விளையாட்டில் ஸ்ரீலங்கா, உலக அணிகளுள் ஒன்றாக வருவதற்கு ஏதுவானது. முரளீதரனை அனைவரும் "முரளி" என்று கூப்பிடுவார்கள். இந்த வெற்றி கிடைத்த பிறகு, தாய்நாட்டில் பற்றுடைய முரளி "எங்களுடைய தேசம் ஆஸ்திரேலியா, இந்தியா மாதிரி பெரியது இல்லை. மிகவும் சிறியது. இந்த வெற்றி எங்கள் ஊருக்கு உலகத்தில் நல்ல பெயர் கொடுக்கிறது. பல இளைஞர்கள் ஒரு நாள் முழுவதும் விளையாட விரும்புகின்றனர். அவர்களும் ஒரு நாள் உலகத்தில் இந்த விளையாட்டில் தங்கள் நாட்டின் வெற்றி வீரனாக வர விரும்புகின்றனர்.

1996 ம் ஆண்டு நடந்த உலகக் கோப்பை (World Cup 1996) கிரிக்கெட் விளையாட்டில் ஸ்ரீலங்கா வெற்றி பெற்றதை முரளீதரன் இன்னும் நினைவு படுத்திக் கொள்கிறார். முரளிக்குப் பல வெற்றிகள் கிடைத்தும் அவர் பந்து போடும் விதத்தைப் பற்றி பலர் ஆசேஷபணை (controversy) செய்து வந்தனர். விளையாடுபவர்களில் சிலர் இவர் பந்து போடும் விதத்தைப் பார்த்து "பந்து எறிகிறார்" என்றும், இப்படி எறிவது விளையாட்டின் விதிமுறைகளுக்கு அப்பால் உள்ளது என்றும் கூறி உள்ளனர். இதனால் முரளியை ICC அங்கத்தினர்கள் பல விதமான கேள்விகளைக் கேட்டனர். விளையாட்டு பற்றி ஆராய்ச்சி செய்பவர்களும் (விஞ்ஞானிகளும்)இவர் பந்து போடும் விதம் விளையாட்டின் விதிமுறைகளுக்குள் இருக்கிறதா என்று பார்த்தனர். இந்த விசாரணைகள் நடக்கும் போது தன் மீது குற்றச்சாட்டுகள் ஒன்றும் வராது என்று மிகவும் தன்னம்பிக்கையுடன் இருந்தார். இவருக்கு விசாரணை நடக்கும் போது, குழுவில் உள்ள மற்றவர்களும், பழைய குழுத்தலைவர் அர்ஜுன ரணதுங்காவும் உள்ளூரிலும் வெளியூரிலும் (முரளியை விரும்புபவர்கள்) மிகவும் ஆதரவாக இருந்தனர். 2004 ம் ஆண்டு நவம்பர் மாதம் ICC ஆராய்ச்சிக்குழு முரளி பந்து போடுவதில் பிழை ஒன்றும் இல்லை என்று அறிவித்தது. முரளி பந்து போடுவதில் தனித்தன்மை இருக்கிறது என்றும், கிரிக்கெட் விளையாட்டின் விதிமுறைகளுக்குள் இருக்கிறது என்றும் இந்தக் கமிஷன் கூறியது.

முரளி பத்திரிகையாளர்களிடம் பேசும்போது கூச்சம் பயம் இருப்பவர் போல் தோற்றம் அளிப்பார். ஆனால் இவருடன் விளையாடுபவர்கள், "முரளி எப்போதும் பொறுப்பு எடுத்துக்கொண்டு தன்னுடைய கருத்துகள் எல்லாவற்றையும் கூறுவார்" என்று கூறினார்கள். தான் வசிக்கும் இடத்தில் உள்ள விளையாட்டுக் குழுவிற்கும் தேசியக் குழுவிற்கும் பொறுப்பெடுத்துக் கொண்டு எல்லா உதவிகளையும் செய்வார். முரளி பல மணி நேரங்கள் பந்து போடுவதில் பயிற்சி செய்வதாகவும் விளையாட்டில் மிகவும் விருப்பமுள்ளவர் என்றும் இவரைப் பார்த்தவர்கள் கூறுகிறார்கள்.

விளையாட்டில் பொறுப்புகள் பல எடுத்துக் கொண்டபடியால் பல சிரமங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. 2007 ம் ஆண்டு கரிபியனில் நடக்கும் போட்டிக்குப் பிறகு தான் உலக அரங்கில் விளையாடுவதில் இருந்து ஓய்வு பெறப் போவதாகக் கூறியுள்ளார். அதிக மேன்மை அடைய விரும்பும் முரளீதரன், தான் உச்சக்கட்டத்தில் இருக்கும்போதே ஓய்வு பெற விரும்புவதாகவும் கூறியுள்ளார். கலந்து கொண்டு விளையாடும் மற்ற குழுக்கள் இதை கவனிக்கவும்.



www.theallpapers.com

Now answer the following questions in **Tamil** using your own words as much as possible.

1 உலக கிரிக்கெட் அரங்கில் ஸ்ரீலங்காவும் வருவதற்கு முரளீதரன் என்ன உதவி செய்தார்? [1]

2 முரளி தேசப்பற்று உடையவர் என்பதை ஆசிரியர் எவ்வாறு எடுத்துக் கூறுகிறார்? [1]

3 முரளியின் சாதனை ஸ்ரீலங்காவிற்கு நல்லது என்று ஏன் அவர் நினைக்கிறார்? இரண்டு காரணங்கள் கூறவும். [2]

4 முரளி தான் அதிக விக்கெட் எடுத்ததைவிட, உலகக் கோப்பை பெற்றதில் மிகவும் பெருமைப் படுகிறார் என்று நீ ஏன் நினைக்கிறாய்? [2]

5 முரளியின் மேல் ஏன் குற்றம் கண்டு பிடித்தார்கள் என்பதைப் பற்றி உன் சொந்த வார்த்தைகளில் எழுதவும்? [2]

6 விளையாட்டு ஆராய்ச்சியாளர்கள் முரளியை ஏன் பரிசோதனை செய்தார்கள் என்று நீ நினைக்கிறாய்? [2]

7 முரளியின் விசாரணையின் போது யாரெல்லாம் முரளிக்கு ஆதரவாக இருந்தனர்? [3]

8 முரளி பந்து போடும் முறை தனிப்பட்டது என்றும், விளையாட்டைப் பற்றி கமிஷன் எடுத்த முடிவுகளையும் எழுதவும். [3]

9 2007 ம் ஆண்டில் முரளியின் திட்டங்கள் என்ன? இரண்டு காரணங்கள் கொடுக்கவும். [2]

10 இந்தப் பத்தியிலிருந்து முரளியின் தனிப்பட்ட குணங்கள் என்ன என்று நமக்குத் தெரிகிறது? [3]

11 இதைப் படித்த பிறகு முரளி ஸ்ரீலங்காவின் கிரிக்கெட் குழுவிற்கு நல்ல தலைவராக வருவார் என்று நீ நினைக்கிறாயா? மூன்று காரணங்கள் காட்டி விடை எழுதவும். [4]


www.theallpapers.com

BLANK PAGE



www.theallpapers.com

**BLANK PAGE**



www.theallpapers.com

BLANK PAGE

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.



www.theallpapers.com